## 22

### குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்திலுள்ள இச்சையடக்கம் [தன்னடக்கம்]

## [கலாத்தியர் 5:22, 23]

ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பம் சந்தோஷமான வெற்றிகரமான குடும்பமாகும். அது வெற்றிபெறுகிறது ஏனென்றால் குடும்பத்திலுள்ள மக்கள் ஆவியின் கனி கொடுப்பதினால். இந்த பாடவரிசையில் ஆவியின் கனியின் பண்பு எப்படி குடும்பத்திற்கு தொடர்புடையது என்பதைச் சுட்டிக்காட்டி அந்த உண்மையை வெளிக்காட்ட முயற்சி செய்திருக்கிறோம். இந்த பாடம் ஆவியின் கனியின் ஒன்பதாம் மற்றும் கடைசி கனி பற்றினதாகும்: அது இச்சையடக்கம், அல்லது தன்னடக்கம்.

## "இச்சையடக்கம்" என்பதின் அர்த்தம்

"இச்சையடக்கம்" என்றால் என்ன? முதலாவது எது இச்சையடக்கம் அல்ல என்பதை பார்க்க வேண்டும்.

**எது இச்சையடக்கம் (தன்னடக்கம்) அல்ல**

கிறிஸ்தவர்களாகிய நாம் கோபத்தை வைத்துக் கொண்டு அல்லது ஆத்திரத்தை என்றென்றும் உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொண்டு, தன்னடக்கத்தை பயிற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை; ஆனால், எதிர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு நியாயமான வெளிவழியைக் கண்டுபிடிப்பது அவசியமாகிறது. உதாரணமாக, காலத்தை உபயோகிப்பதில் தன்னடக்கம் கொண்டிருத்தல் என்பது முன்பே ஆயத்தம் செய்யாமல் எதையும் திட்டமிடாமல் எதையும் உடனே செய்வதை தடைசெய்கிறது. சிலவற்றை உடனடியாக செய்தல் என்ற கருத்தானது, *சட்டமாக,* நாம் ஒரு திட்டத்தின் படி செய்கிறோம் என்று கருத்து தெரிவிக்கிறது. காலத்தை உபயோகிப்பதில் தன்னடக்கம் கொண்டிருத்தல் என்பது, நாம் ஒரு திட்டத்தின்படி நாம் நம் நேரத்தை செலவிடுவதை அவசியப்படுகிறது. பின்பு தன்னடக்கத்தை பயன்படுத்தி, திட்டமிடாமல் உடனடியாக சிலவற்றை செய்து அவ்வப்போது அனுபவிக்கக் கூடும்.

**இச்சையடக்கம் (தன்னடக்கம்) என்றால் என்ன**

பின்பு, எப்படி இச்சையடக்கத்தின் நற்குணத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்? "இச்சையடக்கம்" என்ற வார்த்தை *enkrateia* KJV ல் தன்னடக்கம் என்று பொருள்படும். இருப்பினும், W. E. Vine சொன்னது,

> "இச்சையடக்கம்" என்பது உகந்த மொழிபெயர்ப்பு ஆகும், தன்னடக்கம் என்பது வரையறுக்கப்பட்ட இச்சையடக்கத்தின் ஒரு வடிவம் ஆகும் (மதுபானத்திலிருந்து விலகியிருத்தல்); தேவனால் கொடுக்கப்பட்ட அநேக அதிகாரங்கள் மனிதனால் தவறாக உபயோகப்படுத்தப்படக்கூடும்; சரியான முறையில் உபயோகப்படுத்துவதற்கு தேவைப்படுவது தேவ ஆவியின் வழிநடத்துதலால் அந்த அதிகாரத்தை கட்டுப்படுத்த முடியும்.[1]

அந்த வார்த்தை குறிப்பது என்னவென்றால் "ஒருவனுடைய மனக்கிளர்ச்சி, கணத்தாக்கம் அல்லது ஆசைகளை கீழ்ப்படுத்துவது."[2]

ஒருவேளை ''இச்சையடக்கம்'' என்பதை பவுல் தன் வரிசையில் கடைசியாக வைத்தது குறிப்பிடத்தக்கதாகும், எப்படியென்றால் "அன்பு" என்பதை முதலாவதாக வரிசைப்படுத்தி குறிப்பிட்டது போல. அன்பு அதைத் தொடரும் பண்புகளை உள்ளடக்கியது ஆகும்; மற்ற எல்லா பண்புகளையும் கைப்படுத்துதலுக்கு இச்சையடக்கம் திறவு கோலாயிருக்கிறது. உதாரணமாக, எப்படி ஒரு கிறிஸ்தவன், நல்லவனாக, தயவாக, அன்பாக, விசுவாசத்தோடு, சாந்தமாக, பொறுமை அல்லது நீடிய பொறுமையாக இருக்க முடியும்? இச்சையடக்கத்தை பயிற்சி செய்வதனால் மட்டுமே; சாதாரணமாக, இயற்கையாக, மாம்சத்தின் தன்மை என்பது பொறுமையற்றதான, தயவு இல்லாமல், பகையை உள்வைத்து பழிவாங்க வகை தேடி புலனுணர்வுக்கு ஆட்பட்ட இச்சைகளுக்கு இணங்குவதுண்டு. இச்சையடக்கத்தை மேம்படுத்துவதின் மூலமாக மட்டுமே நாம் இப்படிப்பட்ட உலக வழக்கத்திற்கு "இல்லை" என்று சொல்லி அப்படியே ஆவிக்குரிய பண்புகளுக்கு "ஆம்" என்று சொல்ல முடியும்.

## இச்சையடக்கத்தின் தேவை

கிறிஸ்தவர்கள் இச்சையடக்கத்துடன் இருப்பதின் முக்கியத்துவம் சமுதாயத்தில் இச்சையடக்கத்தின் குறைவை தெளிவாக காணமுடியும். கிறிஸ்து இச்சையடக்கத்தையும் மற்றும் தன்னைத்தான் வெறுக்க வேண்டும் என்று பிரசங்கிக்கும் போது (மத்யே 16:24), இன்று அநேக சமுதாயத்தினர் சுயத்திற்கே இடம் கொடுக்கிறார்கள். உதாரணமாக, அமெரிக்காவில் 1946 க்கும் 1965 க்கும் இடையில் பிறந்தவர்கள் "என் தலைமுறையினர்" என்று அறியப்பட்டனர். அவர்கள் ஆர்வம் முக்கியமாக முழுவதும் இல்லை என்றாலும், "எனக்குள்," "எனது" என்றே இருந்தது. "தற்காதல்" - தன்னிடமாய் அன்புகூருதல் அல்லது தன்னுடைய தோற்றத்திடம் - என்பது பலத்திருந்தது. தன்முனைப்பு மற்றும் சுய திருப்தி காணுதல் என்பதில் புதிய வலியுறுத்தம் இருந்தது. அது அறிவுறுத்துவது என்னவென்றால் ஒவ்வொருவனுடைய பிரபஞ்சத்தின் மையப்பொருள் "சுயம்" என்பதேயாகும். இந்த தலைமுறையினர் தன்னலத்தில் குறைவாகவே அக்கறை செலுத்துவதாக காணப்படுகிறது.

குறிப்பாக இச்சையடக்கம் தேவையானது மட்டுமல்ல, எனென்றால் அது குறைவுபடுகிறது, ஆனால் அதுவும் தேவையே. ஏனென்றால் கிறிஸ்தவர்கள் இச்சையடக்கமாக இருப்பதற்கு கட்டளை பெற்றிருக்கின்றனர். பேதுரு எழுதும்போது கிறிஸ்தவன் தன் விசுவாசத்தோடு மற்ற நற்பண்புகளைக் கூட்டும்போது. தைரியம், ஞானம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம்

மற்றும் அன்புடன் இச்சையடக்கத்தையும் வைத்தார் (2 பேதுரு 1:5-7). பவுல் பெலிக்ஸ்க்கு சுவிசேஷம் அறிவிக்கும் போது இச்சையடக்கத்தின் தேவையை போதித்தார் (நடபடிகள் 24:25). சபை மூப்பர்கள், மந்தையை மேய்கிறவர்களாய் மற்றும் உதாரணங்களாய், இச்சையடக்கத்தோடு இருக்க வேண்டும் (தீத்து 1:8). பின்னும் பவுல் (1 கொரிந்தியர் 9:24, 25) கிறிஸ்தவர்களுக்கு உதாரணமாய் அக்காலத்தில் உள்ள ஓட்ட வீரர்கள் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள் என்று குறிப்பிட்டு இச்சையடக்கத்தின் தேவையை விளக்கப்படுத்தினார் (1 கொரிந்தியர் 9:24, 25). அவர் மேலும் இச்சையடக்கத்திற்கு தன்னை ஒரு உதாரணமாக காண்பித்தார். “மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்” (1 கொரிந்தியர் 9:27).

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் உலகத்தில் உள்ளவர்களை விட வித்தியாசமாக இருக்க வேண்டும்! நாம் சுயத்தை நிந்திக்காமல் - மத்தேயு 22:39 ன்படி நம்மை நாம் அன்புகூரவேண்டும் என்பதால் - சுயம் என்பது உலகத்திலே மிகவும் முக்கியமானதல்ல என்று நாம் அறிகிறோம். சுயம் எப்பொழுதுமே நிறைவேற்ற வேண்டியதோ, அல்லது உறுதிப்படுத்துவதோ அல்லது ஈடுபாடு கொண்டிருக்க வேண்டியதோ இல்லை; சில சமயங்களில் சுயத்தை நாம் நிராகரிக்க வேண்டும்; எப்பொழுதுமே சுயத்தை நாம் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும்.

அதுபோலவே, ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பம் மற்ற குடும்பங்களை விட வித்தியாசமானது, ஏனென்றால் இச்சையடக்கம் கிறிஸ்தவ குடும்பத்தில் விசேஷித்த பண்பாடாகும். இச்சையடக்கம் எப்படி குடும்பத்தை பாதிக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள நாம் இரண்டு குடும்பத்தை எடுத்துக் கொள்ளலாம் - ஒன்று இச்சையடக்கத்தை செயல்படுத்தாதது மற்றொன்று செயல்படுத்துவது.

## இச்சையடக்கத்தை பயிற்சி செய்தல்

**இச்சையடக்கம் இல்லாத குடும்பம்**

குடும்பத்தில் இச்சையடக்கம் இல்லையென்றால், வீட்டின் பொருளாதார நிலை குழப்பத்திற்குள்ளாகும். குடும்பத்திலுள்ள நபர்கள் எப்படி பணம் செலுத்துவோம் என்று அறியாமல் பொருட்களை கடன் வாங்குவார்கள். அவர்கள் பணம் கடன் வாங்கி திரும்பச் செலுத்த முடியாமல் இருப்பார்கள். அவர்கள் செலுத்த வேண்டிய கடன்பாக்கி அதிகமாகிப் போகும். அவர்கள் எதிர்காலத்தைப் பற்றி நினைக்கவில்லை மற்றும் பணத்தை சேர்த்து வைக்க வில்லை.

அவர்கள் வாழ்க்கை ஒழுங்கற்றதாய் இருக்கின்றது. அவர்கள் அட்டவணையை பின்பற்ற எந்தவித முயற்சியும் எடுக்காததால், அவர்கள் தங்கள் வேலைக்கு அடிக்கடி தாமதமாக செல்வர் அல்லது நிர்ணயத்த வேலைகளை மறப்பார்கள். ஒருவேளை அவர்கள் காலை சீக்கிரம் எழுந்திருக்க வேண்டியபோதும் இரவு நேரம் கடந்து உறங்கச் செல்வார்கள். அவர்களால் சீக்கிரம் எழுந்திருப்பது கூடாமற்போகும், ஒழுங்கற்ற தங்கள் வாழ்க்கை முறைகளால், வேதாகமம் வாசிப்பதற்கு, ஜெபம் செய்வதற்கு அல்லது குடும்ப

ஜெபத்திற்கு சமயம் கிடைப்பதில்லை. அவர்கள் எந்த ஒரு காரியத்தையும் எந்த ஒரு எண்ணமும் இல்லாமல் நேரத்திற்குத் தக்கதாக செய்து விட்டு பின்பு தாங்கள் கனியற்ற செயல்களில் தங்கள் நேரத்தை செலவிட்டதைக் குறித்து வருந்துவார்கள்.

அந்த குடும்பத்தினரின் வீடும் நிச்சயமாக ஒழுங்கற்றதாக இருக்கும். ஏனென்றால் அவர்களுக்கு திட்டமிட்ட ஒரு அட்டவணை கிடையாது என்பதால் குடும்பத்திலுள்ள நபர்களுக்கு வீட்டை சுத்தம் செய்ய சமயம் கிடையாது. இதன் காரணமாக, அந்த வீடு எப்பொழுதும் ஒழுங்கற்று இருக்கும், பல சமயங்களில் தேவையான போது பொருள்கள் கண்டு பிடிக்க முடியாது இருக்கும்.

மிகவும் முக்கியமாக குடும்பத்திலுள்ள நபர்கள் எந்தவித மனத்தயக்கம் இல்லாமல் மாம்சத்தின் இச்சைகளுக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். சாப்பிடக்கூடிய உணவு இருந்தால், அவர்கள் சாப்பிடுவார்கள், தாங்கள் அவ்வளவு சாப்பிடக்கூடாது என்று அறிந்தும் சாப்பிடுவார்கள், எப்படியாவது சாப்பிடுவார்கள். மகிழ்ச்சியாக இருக்க "கேளிக்கைகள்" இருக்குமானால், மறுநாள் அதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்பதைப் பற்றி பொருட்படுத்தாமல் அவர்கள் மகிழ்ச்சியாயிருக்க தீர்மானிக்கிறார்கள். அவர்கள் இறையாகிய ஆசைகளுக்கு இணங்கி, போதை அளிக்கக்கூடிய பானங்களைக் குடித்து, சூதாட்டத்தில் ஈடுபட்டு, போதை மருந்து உட்கொண்டு மற்றும் சட்ட விரோதமான பாலியல் உறவுகளில் ஈடுபட்டு சற்றும் அதின் விளைவுகளை சிந்திக்காமல் தங்கள் சுயத்தில் ஈடுபட்டிருப்பார்கள்.

உண்மையில், இப்படிப்பட்ட விளைவுகள் இச்சையடக்கத்தின் குறைபாடுகளுக்கு சமமான பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை. உதாரணமாக, ஒழுங்கற்ற வீட்டைக் கொண்டிருப்பது என்பது பாவமல்ல, வேசித்தனம் என்னும் இச்சைக்கு ஒப்புக்கொடுப்பது பாவம். இருப்பினும், எவர் ஒருவரின் அளவின்படியும் இச்சையடக்கம் இல்லாத குடும்பம் வெற்றிகரமான குடும்பம் ஆகாது. நிச்சயமாக இப்படிப்பட்ட குடும்பத்தில் அல்லது குடும்பத்தால் தேவன் மகிமைப்பட மாட்டார்.

**இச்சையடக்கம் உள்ள குடும்பம்**

இதற்கு எதிரிடையாக ஆவியானவர் இச்சையடக்கத்தை பெருக்கும் ஒரு குடும்பத்தை நினைத்து பார்ப்போம்.

இந்த குடும்பத்தில் உள்ள நபர்கள் தங்கள் பொருளாதார மூலத்தை ஞானமாய் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் தேவையில்லாமல் கடன்படுவதை அல்லது வரவுக்குமேலே செலவு செய்வதை தவிர்க்கிறார்கள். அடங்காது செலவு செய்யாமல், தாங்கள் காண்கிறதை எல்லாம் வாங்காமல், கடன்பட்டு வாங்கி பின்பு செலுத்த முடியாமல் போகாமல், இச்சையடக்கத்தை பின்பற்றுகிற குடும்பம் பணத்தை சம்பாதிப்பதிலும் மற்றும் செலவு செய்வதிலும் வேதாகம வழிமுறைகளை பின்பற்றுகின்றனர். அவர்கள் பணத்தை நேசிப்பதோ அல்லது ஐசுவரியவான் ஆவதற்கு ஆசைப்படுவதோ இல்லை (1 தீமோத்தேயு 6:9, 10), ஆனால் அவர்கள் தங்கள் கைகளினால் உண்மையாய் வேலைசெய்து தேவையானவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பர் (எபேசியர் 4:28). அவர்கள் என்ன சம்பாதித்தார்களோ அதை உற்சாகத்தோடு தாராளமாய் கொடுப்பர் (1 கொரிந்தியர் 16:1, 2; 2 கொரிந்தியர் 9:7). இவற்றை எல்லாம் செய்வதற்கு,

அவர்கள் தங்கள் செலவுகளை கட்டுப்படுத்துகின்றனர், உணர்ச்சி வேகத்தினால் வாங்குவதைக் தவிர்த்து, தங்கள் வரவு செலவுகளில் கவனம் வைத்து தங்கள் எதிர்காலத்தை திட்டம் செய்கின்றனர்.

*தேவனே தங்கள் எல்லா சம்பத்திற்கும் உண்மையான முதலாளி என்பதால் அவர்கள் தங்களிடம் இருக்கும் எல்லாவற்றிற்கும் உக்கிராணக்காரன் என்று அறிந்து அந்த குடும்பத்தால் பொருள் ஆதாரங்கள் வீண் ஆவதை தவிர்க்கின்றனர்.* அந்த குடும்பத்தில் பொருட்களை மறு சூழற்சி செய்கிறார்கள் - அவர்கள் சுற்று சூழலுக்கு நன்மை செய்வதற்காக மட்டும் அல்ல, அவர்கள் வைத்திருக்கிற எல்லாம் ஆண்டவருக்கு உரியது என்பதினால் இப்படிச்செய்கின்றனர். நாகரிகம் மாறிவருவதினால் தங்களிடம் உள்ள பழையவற்றை புதிதாக்கும் ஆசைக்கு எதிர்த்து நிற்கிறார்கள். உலகத்தின் கண்ணோட்டத்தில் எது நாகரிகம் என்பதால் கட்டுப்படுத்தப்படாமல் தேவன் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்தவற்றை எப்படி சிறந்த முறையில் உபயோகப்படுத்தலாம் என்று எண்ணுகின்றனர்.

*இச்சையடக்கம் உள்ள குடும்பம் தங்கள் நேரத்தை நன்மையான வழியில் செலவு செய்கிறார்கள்.* நம்மிடம் இருக்கும் எல்லா ஆதாரங்களிலும், நேரம் மிக விலையேறப் பெற்றது. நாம் பணத்தை இழந்தால், நம்மால் அதைக் காட்டிலும் அதிக பணத்தை சம்பாதிக்க முடியும். ஒரு கார் செயலற்று கிடந்தால், அதை நாம் சரிசெய்யவோ அல்லது மாற்றவோ செய்யலாம். ஆனாலும் நம்முடைய நேரத்தை வீண்விரயம் செய்து தேவையற்ற காரியத்திலும் பயனற்ற செயல்களிலும் இழந்து போனால், நாம் இழந்துபோன நேரத்தை திரும்பி பெறவே முடியாது. இச்சையடக்கமுள்ள கிறிஸ்தவர்கள் “காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுவார்கள்” (எபேசியர் 5:16). “காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வது” என்பது தங்களிடம் இருக்கும் நேரமானது வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு காரியங்களைக் குறிக்கும். சிலருக்கு விளையாடுவதில் குறைந்த நேரம் செலவிடுவதாக இருக்கலாம். மற்றவர்களுக்கு தொலைக்காட்சி பார்ப்பதில் குறைந்த நேரம் செலவிடுவதாக இருக்கலாம். ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும், தங்கள் கால அட்டவனையில் சேர்க்க வேண்டியவை (அ) ஒவ்வொரு சபைக்கூடுதலில் பங்கு பெருவது (ஆ) வேதம் வாசிப்பது மற்றும் ஜெபம் தவறாமல் செய்வது (இ) மற்றவர்களுக்கு நன்மை செய்வது (ஈ) குடும்பத்தின் தேவைகளை சந்திப்பது. இச்சையடக்கத்தை வெளிப்படுத்துகிற குடும்பத்தில், குடும்பத்திலுள்ள நபர்கள் பொதுவாக தங்கள் வாழ்வினை அட்டவணையின்படி வாழ்ந்து தங்கள் நேரத்தை ஞானமாய் செலவிடுவர்.

*ஒவ்வொரு குடும்ப நபரும் தங்கள் சரீரத்தை பாதுகாத்து கொள்கின்றனர்.* கிறிஸ்தவர்களாய், நம்முடைய சொந்த சரீரத்தை பார்த்துக் கொள்வது நம்முடைய பொறுப்பு, முடிந்த அளவிற்கு நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும், இதே கருத்தின்படியே நம்முடைய எல்லா பொருளாதாரம் மற்றும் பொருட்கள் ஆதாரங்களை பொறுப்பாய் உபயோகப்படுத்தி ஞானமாய் இருக்க வேண்டும் அதாவது, நமது சரீரம் தேவனுக்கு சொந்தமானது (1 கொரிந்தியர் 6:19, 20). தேவனுக்கு சொந்தமானதில் நாம் நல்ல உக்கிராண பொறுப்பை உடையவர்களாய் இருக்கிறோம். அதனால் அதிகமாக உண்டும், போதை மருந்து உபயோகித்தும், மதுபானக்காரனாய், அல்லது புகைப்பிடிக்கிறவனாய் இருந்தும் நம்முடைய சரீரத்திற்கு கேடு உண்டாக்கக்கூடாது. மேலும் நம்முடைய ஆரோக்கியம்

நம்மிடம் இருக்கும்வரை நம்முடைய சரீரத்தை ஆரோக்கியமாய் வைத்துக் கொள்வதற்கு எல்லாவற்றையும் செய்வதற்கு கடமைப்பட்டுள்ளோம். இச்சையடக்கப் பண்பு உடைய கிறிஸ்தவன், அதனால் அவன் அல்லது அவள் தன் சரீரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

*குடும்பத்திலுள்ள நபர்கள் சோதனைகளை எதிர்க்கின்றனர்.* ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்வதற்கு பிரதானமான காரணம் என்னவென்றால் தான் செய்யப் போகும் செயலின் விளைவுகளை தான் முன்கூட்டியே சிந்திக்காததே ஆகும். ஒருவேளை ஒரு வாலிபனின் வாயில் இருந்து அவனை அறியாமலே ஒரு சாப வார்த்தைதவறி விழலாம். ஒரு ஸ்திரீ விளைவு தெரியாமல் தன் வார்த்தையினால் எவர் ஒருவரையும் காயப்படுத்த முடியும். ஒரு நொடி ஆசையில், இரண்டு பேர் ஆசைக்கு உடன்பட்டு பாலின பாவச்செயலால் குற்ற உணர்ச்சி அடைகிறார்கள். இச்சையடக்கத்தின் கொள்கை உணர்த்துவது என்னவென்றால் நாம் எப்பொழுதும் நம் செயல்களில் கட்டுப்பாடு உள்ளவர்களாய் இருக்கிறோம், நாம் ஏதாவது செய்யும்போது அல்லது பேசும் போது, அல்லது ஏதாவது செயலில் ஈடுபடும்போது நாம் சிந்தித்து பின்பு செயல்படுகிறோம். பவுல் குறிப்பிடும் போது கிறிஸ்தவர்கள் பாலின ஆசைகளில் கட்டுப்பாடாய் இருக்க வேண்டும் என்றார். அவர் 1 தெசலோனிக்கேயர் 4:3-5ல் இவ்வாறு எழுதினார்.

> நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து.

உண்மையில், எவரொருவரும் - எந்த குடும்பத்திலும் - நாம் எப்பொழுதும் விவாதம் செய்து கொண்டு வருகிறபடி இச்சையடக்கத்தை முழுமையாக பயிற்சி செய்வதில்லை. ஆயினும், கிறிஸ்தவர்கள் உலகமக்களை காட்டிலும் மிகுதியாக இச்சையடக்கத்துடன் வாழ்கின்றனர். கிறிஸ்தவர்கள் நிறைந்த குடும்பத்தில் ஆவியின் கனியை கொடுக்கிறவர்கள் மற்றவர்களைவிட அதிகமாக இச்சையடக்கத்தை வெளிக்காட்டுகின்றனர்.

## இச்சையடக்கத்திற்கு வெகுமானம்

எந்த குடும்பத்தில் ஆவியானவர் இச்சையடக்கத்தை உற்பத்தி செய்கிறாரே அந்த குடும்பம் ஆசீர்வதிக்கப்படும். இச்சையடக்கம் குழப்பத்திலிருந்து ஒழுக்கத்தை கொண்டு வருகிறது. அந்த குடும்பத்தில் எல்லா விலைப்பட்டியல்களுக்கும் பணம் செலுத்தப்படும், மற்றும் அந்த குடும்பம் செயல் இழக்க செய்கிற கடன்படாமல் சுகமான வாழ்விற்கு போதுமானதாய் இருக்கும். குடும்பத்திலுள்ள நபர்கள் தங்களிடம் உள்ளவற்றில் திருப்தியாக வாழ கற்றுக்கொள்வர் (எபிரேயர் 13:5) மற்றும் அவர்கள் உலகம் விதித்த செயற்கை நிலையில் வாழ வேண்டும் என்று நினைக்கமாட்டார்கள். நேரம் ஞானமாக உபயோகப்படுத்தப்படுகிறது, அதனால் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிற உலகத்தில் அமைதியும் சமாதான உணர்வும் காணப்படுகிறது.

இதற்கு எல்லாம் மேலாக, தேவன் மற்றும் அவருடைய செயல்

களே அந்த குடும்பத்தின் அட்டவணையின் மையப்பொருள் ஆகும். அதன் முடிவாக, குடும்பத்திலுள்ள நபர்கள் மாம்சத்தின் இச்சைகளை எதிர்த்து நிற்பர். கிறிஸ்துவின் காரணத்திற்காக அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். அப்படிப்பட்ட குடும்பம் - ஆவியானவர் இச்சையடக்கத்தின் கனி கொடுக்கும் போது - அது வெற்றிகரமானதாய் இருக்கும். அது நீடித்திருக்கும், குடும்பத்திலுள்ளவர்கள் மகிழ்ச்சியையும் நிறைவையும் காண்பர். அந்த குடும்பத்திலிருந்து கிறிஸ்துவின் வெளிச்சம் உலகத்தில் பிரகாசிக்கும்.

## முடிவுரை: இச்சையடக்கத்தின் ஆதாரமூலம்

யார் அல்லது எது உங்களை கட்டுப்படுத்துகிறது? உங்களுடைய ஆர்வம், இச்சை, ஆசை, கோபம் மற்றும் உணர்ச்சிகள் உங்களை கட்டுப்படுத்துகிறதா? பாவம் உங்களை பற்றிக் கொண்டிருக்கிறதா? சாத்தான் உங்கள் வழிகளில் வைத்திருக்கிற இச்சையினால் உங்களை கட்டுப்படுத்துகிறானா? அல்லது நீங்களே உங்களை கட்டுப்படுத்துகிறீர்களா? இச்சையடக்கம் மற்றும் தன்னைத்தானே வெறுப்பது ஒரு கிறிஸ்தவனின் அறிகுறி, அந்த குடும்பம் தான் உண்மையிலே கிறிஸ்தவக் குடும்பம்.

இருப்பினும். உண்மையில் சுய - கட்டுப்படுத்தல் மட்டுமே தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நோக்கம் அல்ல. மாறாக *கிறிஸ்து* - கட்டுப்படுத்தலாக இருக்கிறது. நம்முடைய நோக்கம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவால் கட்டுப்படுத்தப்பட வேண்டும். நாம் பவுலோடு சேர்ந்து “இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” (கலாத்தியர் 2:20ஆ) என்று சொல்லலாம். மேலும், நாம் தேவனை போதுமான அளவு திருப்தி செய்ய இயலாது; நமக்குள்ளே தானே அப்படிப்பட்ட பெலன் கிடையாது. ஆவியானவர் நம் வாழ்வில் கனிதந்து நாம் அதை செயல்படுத்தும்போது தான் தேவனுக்கு தேவைப்படுகிற இச்சையடக்கம் பெருகும். நாம் கிறிஸ்துவுக்கு நம்மை கொடுக்கும் வரை பரிசுத்த ஆவியானவர் தன்னிலேதானே கனிகொடுக்க இயலாது.

நீங்கள் இச்சையடக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டுமானால், முதலாவது கிறிஸ்துகட்டுப்படுத்துகிறவராய் இருக்க வேண்டும். அவரே நம்முடைய இச்சையடக்கத்தின் ஆதாரம். கிறிஸ்துவே இச்சையடக்கத்தின் தொடக்கம், இச்சையடக்கத்தை பயிற்சி செய்கிற அதிகாரம், மற்றும் இச்சையடக்கத்தின் இலக்கு. நீங்கள் சுயம், பாவம், மற்றும் சாத்தானை ஜெயம்கொள்ள வேண்டுமானால் நீங்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியுங்கள்!

---

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 620. Most modern versions translate the word as “self-control” (NKJV; NRSV; NIV; NAB). [2]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 274.